அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்:108/2016*
*தேதி:19.06.2016*

# பூரண மது விலக்கு இலக்கை நோக்கி தமிழகம் 30 நாட்களுக்குள் அதிரடி நடவடிக்கை முதலமைச்சருக்கு தமிழக மக்கள் சார்பில் நன்றி

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

கடந்த மே 24 ஆம் தேதி முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் டாஸ்மாக் கடைகளின் பணி நேரத்தை குறைத்து உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அடுத்த கட்ட நடவடிக்கையாக 500 கடைகளை மூடுவதற்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

முதல்வரின் படிப்படியான பூரண மது விலக்கு அறிவிப்பை வெறும் கண்துடைப்பு என்று தேர்தல் நேரத்தில் போட்டிப் போட்டுக் கொண்டு பிரச்சாரம் செய்த எதிர்கட்சிகள், 30 நாட்களுக்குள் தமிழகம் முழுவதிலும் உள்ள கடைகளில் 500 கடைகளை தேர்ந்தெடுத்து அவற்றை மூடுவதற்கு உத்தரவு பிறப்பித்து அதனை உடனடியாக அமலுக்கு கொண்டுவந்திருக்கும் முதல்வரின் இந்த செயலை பாராட்ட வேண்டும்.

உடனடி சான்றிதழ்கள் மூலம் கடைகள் மூடப்படுவது ஊர்ஜிதப்படுத்தப்படுவதும் அங்கு பணி புரிந்தவர்களுக்கு மாற்று பணிக்கான நடவடிக்கைள் எடுப்பதும் பாராட்டுக்குரியது.

இந்த துரித செயல்பாடுகள் முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் பேசியது போல முதல்வர் சொன்னதையும் செய்வார், சொல்லாததையும் செய்வார் என்ற பெரும் நம்பிக்கையை மக்களுக்கு தரும். மக்கள் நலன் குறித்த அறிவிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மது விலக்கை தமிழகத்தில் நிறைவேற்ற எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எனது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்

**நன்றி , வணக்கம்**
**உழைப்பவரே உயர்ந்தவர்**
**என்றும் அன்புடன்**

ஆர் சரத்குமார் B Sc.
நிறுவனர் - தலைவர்